2022 மே 5]

222—

கழிவுநீர்க் குழாய்கள்

*193—திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி:

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதியில் புதிய கழிவுநீர் உந்து குழாய்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதியில் உள்ள தண்டையார்பேட்டை 'B' கழிவுநீர் அகற்றும் நிலையத்திலிருந்து, தண்டையார்பேட்டை 'F' கழிவுநீர் அகற்றும் நிலையத்திற்குச் செல்லும் 600 மி.மீ. விட்டமுடைய பழுதடைந்த பழைய வார்ப்பிரும்பு உந்து குழாயை, 750 மி.மீ. விட்டமுடைய வார்ப்பிரும்பு உந்து குழாயாக மாற்றுவதற்கு ரூ.19.41 கோடி திட்ட மதிப்பீட்டில் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் முதல் கட்ட பணிக்கான நிதி உதவியின்கீழ் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இப்பணிக்கான ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளது.

2. இராயபுரம் தொகுதியில் உள்ள தண்டையார்பேட்டை 'C' கழிவுநீர் அகற்றும் நிலையத்திலிருந்து, தண்டையார்பேட்டை 'B' கழிவுநீர் அகற்றும் நிலையத்திற்குச் செல்லும் 300 மி.மீ. விட்டமுடைய பழுதடைந்த பழைய வார்ப்பிரும்பு உந்து குழாயை, 500 மி.மீ. விட்டமுடைய வார்ப்பிரும்பு உந்து குழாயாக மாற்றுவதற்கு, ரூ.2.67 கோடி திட்ட மதிப்பீட்டில் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் முதல் கட்டப் பணிக்கான நிதி உதவியின்கீழ் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி அவர்கள்.*

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் இன்றையதினம் அறிவிக்கப்பட்டுள்ள ரூ.19 கோடியிலான திட்டம் மற்றும் 2 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் கழிவுநீர்க் குழாய்கள்,* Pumping Station, *உந்து சக்தி திட்டம் ஆகியவற்றைக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி முடித்துவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு.* R.D. *சேகர் அவர்கள்.*

திரு. R.D. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் பழுதடைந்துள்ள குடிநீர் மற்றும் பிரதான கழிவுநீர்க் குழாய்களை மாற்றித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை, சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வடசென்னையில் உள்ள பழுதடைந்த குழாய்கள் முழுவதையும் மாற்றுவதற்கு கிட்டத்தட்ட ரூ.3,000 கோடி செலவில் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார்கள். அந்தப் பணிகள் தற்போது* Chennai Rivers Restoration Trust (CRRT) *மூலம் நிதியினைப் பெற்று பெரம்பூர் பகுதி, ஆர்.கே. நகர் பகுதி மற்றும் இராயபுரம் பகுதி என அனைத்துப் பகுதிகளிலும் இருக்கின்ற பழுதடைந்த குழாய்களை முழுமையாக மாற்றி புதிய குழாய்களை அமைத்து கழிவு நீரினை அகற்றுவதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வெகுவிரைவில்*

2022 மே 5]

டெண்டர் விடப்பட்டு, பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர் அவர்கள்.

திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராயபுரம் பகுதியிலிருந்து, ஆர்.கே. நகர் பகுதி வரை அமைந்துள்ள இளையமுதலி தெருவில் அமைந்துள்ள Pumping Station வரை கழிவுநீர் உந்துசக்திக்கான பணிகள் செய்து தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதுபோல், ஆர்.கே. நகர் பகுதியில் இருக்கின்ற இளையமுதலி தெரு பகுதியிலிருந்து பெரம்பூரில் உள்ள கொடுங்கையூர் பகுதிக்கு அது சென்று சேரும் வகையில் கழிவுநீர் உந்துசக்தி அமைப்பினை அமைத்துத் தர வேண்டும். கடந்த பத்து ஆண்டுகளாக Pumping Station எந்தவித பராமரிப்புமின்றி உள்ளதால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் மேற்காணும் பணிகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வடசென்னை பகுதி முழுவதிலும் இந்தப் பணிகள் நிறைவேற்றப்பட உள்ளன. அதற்காகத்தான் கடந்த முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்திற்கு ரூ.3,000 கோடி ஒதுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது உடனடியாக அந்தப் பழுதினை நீக்குவதற்கு ரூ.198 கோடி செலவில் டெண்டர் விடப்பட்டு விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளன. இராயபுரம், ஆர்.கே. நகர் மற்றும் பெரம்பூர் பகுதிகளில் உள்ள பழுதடைந்துள்ள குழாய்களையெல்லாம் மாற்றி புதிய குழாய்கள்

அமைத்து எங்கேயும் கழிவுநீர் தேங்காமல் செல்லும் வகையில் இந்தப் பணிகள் இந்த ஆண்டே தொடங்கப்பட்டு முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதியில் வாலாஜா என்று ஒரு வாய்க்கால், நெல்லிக்குப்பத்தில் வெள்ளக்குப்பத்தான் வாய்க்கால் என்றும் மொத்தம் இரண்டு வாய்க்கால்கள் இருக்கின்றன. இரண்டு பகுதிகளிலும் உள்ள ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றுகின்ற கழிவுநீர் மற்றும் கழிவுகள் அனைத்தும் அந்த வாய்க்கால்கள் வழியாகத்தான் சென்று ஆற்றில் கலக்க வேண்டும். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக போர்க்கால அடிப்படையில் அவற்றைத் தூர் வாரி, இரண்டு பக்கமும் தடுப்புச் சுவர் அமைத்து channel அமைத்துக் கொடுக்க ஆவன செய்யவேண்டும். நகரத்தில் வீடுகளுக்குள் சாக்கடை வருவதால் பெரும் அவதியாக இருக்கின்றது. கேட்டதையெல்லாம் செய்துகொடுக்கும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இதனைச் செய்து தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வாய்க்கால்கள் எல்லாம் நீர்வளத் துறையின்கீழ் இருக்கின்றன. முதலில் அவர்களிடம் அனுமதி பெறவேண்டும். நகரங்களில் சாக்கடை கலக்கின்ற இடங்களில் சுவர் அமைக்கின்ற பணிகள் தற்போது ஒரு சில இடங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு உரிய முறையில் இதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை அறிந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவினைப் பெற்று அதனை விரைவாகச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2022 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன். மதுரையில் நடைபெறுகின்ற சீர்மிகு திட்டப் பணிகளில், தற்போது பல பணிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, மாநகராட்சி சார்பாக வைகை ஆற்றின் இரு கரைகளிலும் 11 கி.மீ. நீளத்திற்கு விரைவுச் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலைத் துறைமூலம் 8 கி.மீ.-ம், மாநகராட்சி சார்பாக 3 கி.மீ.-ம் எடுக்கப்பட்டிருக்கின்றன. மாநகராட்சியால் எடுக்கப்பட்டிருக்கின்ற இந்தப் பணிகள் எப்போது முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10–15

மேலும், அந்தப் பகுதியில் அமையவிருக்கின்ற பூங்காக்கள், நடைபாதைகள் அமைக்கும் பணிகள் எப்போது முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11 நகரங்களில் சீர்மிகு நகரத் திட்டங்களின்கீழ் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன், அந்தத் திட்டத்தில் பணியாற்றிய,* tender *எடுத்த ஒப்பந்ததாரர்கள் அதை உடனடியாகச் செய்யவில்லை. மீண்டும் அவர்களை அழைத்து, பணியைத் தொடருங்கள் என்று சொல்லப்பட்டு, பணிகள் ஒவ்வொரு இடமாக முடிக்கப்பட்டிருக்கின்றன.*

உங்கள் ஊரில் பஸ் ஸ்டாண்ட், வணிக வளாகம் எல்லாம் திறக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) திறக்கப்பட்டுவிட்டது. தலைவர்தான் பஸ் ஸ்டாண்ட்–ஐத் திறந்துவைத்தார். (குறுக்கீடு) நீங்கள் இல்லை என்றெல்லாம் சொல்லாதீர்கள், பஸ் ஸ்டாண்ட் திறந்தாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Assembly–ல் இருந்ததால், அவர்களுக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது, Smart City திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பணிகள் முழுவதையும் விரைந்து செயலாக்க நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு தந்திருக்கிறார்கள். எனவே, எந்தெந்த இடங்களில் பணிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்து உடனடியாகப் பணிகள் தொடர்ந்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.*

திரு. ஜோசப் சாமுவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு எண்கள் 85, 83, 79-லுள்ள பல்வேறு பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் விடுபட்டுள்ளது. விடுபட்டுள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே நகரங்கள் விரிவடைந்துவிட்டன. திட்டங்கள் அதற்காக தீட்டப்படவில்லை. இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் விடுபட்டிருக்கிறதோ அதையெல்லாம் சேர்த்து முழுமையாக பணியை முடிக்க வேண்டும் என்று உத்தரவு தந்திருக்கிறார்கள். அதற்கான DPR, விரிவான திட்ட அறிக்கைகள் எந்தெந்தப் பகுதிகளுக்கு வேண்டுமென்பதை நம்முடைய அதிகாரிகள் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அம்பத்தூர் தொகுதியில் விடுபட்ட பகுதிகளை இணைத்து முழுமையாக பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

2022 மே 5]

இன்னொன்று, இப்போது குழாய்கள் கிடைப்பது கொஞ்சம் சிரமமாக இருக்கிறது. ஒரேயொரு நிறுவனம்தான் அதைத் தயாரித்துக் கொடுத்தது. அந்த நிறுவனமும் இப்போது மூடப்பட்டுவிட்டது. கொரோனா காலத்திற்குப் பிறகு குழாய்கள் அதிகமாக கிடைக்காத காரணத்தால்தான், இப்போது பணி நடைபெறுவது கொஞ்சம் தாமதமாக இருக்கிறது. அதைப்பற்றியும் ஆராய்ந்து, மாற்று ஏற்பாடுகள் என்ன செய்யப்பட வேண்டுமென்பதை துறையின் சார்பாக ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். எனவே, விரைவில் பணியைத் தொடங்கி முடிக்க ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு நகராட்சியில் கழிவுநீரை வெளியேற்றுவதுதான் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. தனிப்பட்ட முறையில் அந்தந்த வீட்டுக்காரர்கள், உந்துகுழாய் மூலமாக வீதிகளில் அதை வெளியேற்றிக்கொண்டிருக்கிறார்கள். 1 இலட்சம் ஜனத்தொகைக்கு மேலிருந்தால் பாதாள சாக்கடை அமைத்துத் தரப்படும் என்று சென்ற ஆண்டே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார். இந்த ஆண்டாவது திருச்செங்கோடு நகராட்சியில் பாதாள சாக்கடை அமைத்துத் தருவோம் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை ஆராய்ந்து, உடனடியாக எப்படி நிறைவேற்ற வேண்டுமென்பதையும் தெரிந்து, அதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்குண்டான தொகைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியைப் பெற்று, இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கு இந்த ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.*

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய எங்கள் அருமை தளபதி அவர்கள், 50 ஆண்டுகால கனவை நனவாக்கி வராகப்பள்ளத்திலிருந்து வீணாகும் நீரைத் தடுத்து, 3,000 குடும்பங்களுக்குக் குடிநீரை வழங்கியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கிட்டத்தட்ட 25,000 மக்கள்தொகை கொண்ட குந்தா தாலுகாவிற்கு கூட்டுக் குடிநீர் அமைத்து, குடிநீர் பிரச்சினை முழுவதையும் தீர்க்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நீலகிரி, ஊட்டிக்கு ஒரு தனி சிறப்புத் திட்டத்தை ரூ.10 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஊட்டி கிட்டத்தட்ட 187 முதல் 200 ஆண்டுகள் வரை பழமை வாய்ந்த பகுதி என்பதால், அங்கு என்னென்ன பணிகள் செய்ய வேண்டியிருக்கின்றன என்பது கண்டறியப்பட்டு, மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணிகள் நடைபெறவிருக்கின்றன. அப்படிச் செய்யப்படுகிறபோது, குடிதண்ணீர், கழிவு நீர் மட்டுமல்ல, அனைத்துப் பணிகளையும் அங்கு செய்வதற்குரிய வாய்ப்பு இருக்கும். அவற்றை நிச்சயமாகச் செய்திட இந்த அரசு கவனித்து ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பூமிநாதன் அவர்கள்.*

திரு. மு. பூமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். மதுரை தெற்கு தொகுதியில் 5, 6 வார்டுகளில் கடந்த 10 ஆண்டு காலமாக சாக்கடை அள்ளப்படாமல் இருப்பதால், குடிநீரும் சாக்கடையும் கலந்துவிடுகிறது. இதனால் 10 வார்டுகளில் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. கிட்டத்தட்ட*

2022 மே 5]

8 மாத காலமாக அதிகாரிகளும் அங்கு வந்து வேலை பார்த்தும் சரியாக முடியவில்லை. அதற்கு விரைந்து நடவடிக்கை எடுத்து, குடிநீரும் சாக்கடை நீரும் கலக்காமல், நல்ல தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்து தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கவனத்தில்கொண்டு, அதிகாரிகளிடம் கலந்து பேசி, எதனால் அடைப்பு ஏற்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்து, உடனடியாக அந்த அடைப்பை எடுத்து, குடிதண்ணீரும் சாக்கடை நீரும் கலக்காமல் இருப்பதற்கு என்ன செய்ய முடியுமோ, அது உடனடியாக செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். திருவள்ளூர் நகரம் இப்போது வளர்ந்து வரக்கூடிய நகரமாகிவிட்டது. கடந்த 2010 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்தபோது அங்கே பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தற்போது விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை வசதி செய்து தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் இதுபற்றி சொல்லியிருக்கிறேன். விடுபட்ட பகுதிகளை இணைத்து, முழுமையாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் பெரு*

[*2022 மே 5*

நகரங்களில், அதுவும் மாவட்டத் தலைநகராக இருக்கக்கூடிய பகுதிகளில் உடனடியாக கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 223, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

223—

மகளிர் கலைக் கல்லூரி

***17836—திரு. மு. ஜெகன் மூர்த்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வைத்திணான்குப்பத்தில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

கே.வி. குப்பம் தொகுதி அமைந்துள்ள வேலூர் மாவட்டத்தில் 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 3 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 4 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. மேலும், வேலூர் மாவட்டம், சேர்க்காடு பகுதியில் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கல்லூரியை sanction *செய்திருக்கிறார்கள். ஆகவே, இப்போது உறுப்பினர் கோரியுள்ள கல்லூரியைத் துவங்கும் நோக்கம் எதுவும் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கூட்டத்தொடரில்கூட கே.வி. குப்பம் தொகுதிக்கு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று*